## மே - 28 - உயிர்ப்புக் கால 7ம் வார ஞாயிறு
### ஆண்டவர் இயேசுவின் விண்ணேற்புப் பெருவிழா
### “உலகனைத்தையும் ஆளும் மாவேந்தர் அவரே“ – திபா 47 : 2

**முதல் வாசகம் : திருத்தூதர் பணி 1 : 12 - 14**

பின்பு அவர்கள் ஒலிவமலையிலிருந்து எருசலேமுக்குத் திரும்பினார்கள். இம்மலை எருசலேமுக்கு அருகில், ஓய்வுநாளில் செல்லக்கூடிய தொலையில் உள்ளது. பேதுரு, யோவான், யாக்கோபு, அந்திரேயா, பிலிப்பு, தோமா, பர்த்தலமேயு, மத்தேயு, அல்பேயுவின் மகன் யாக்கோபு, தீவிரவாதியான சீமோன், யாக்கோபின் மகன் யூதா ஆகியோர் திரும்பி வந்தபின் தாங்கள் தங்கியிருந்த மேல்மாடிக்குச் சென்றார்கள். அவர்கள் அனைவரும் சில பெண்களோடும், இயேசுவின் சகோதரர்களோடும், அவருடைய தாய் மரியாவோடும் இணைந்து ஒரே மனத்தோடு இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தார்கள்.

**பதில்பாடல் :** எக்காளம் முழங்கிடவே உயரே ஏறுகின்றார் ஆண்டவர்

**இரண்டாம் வாசகம் : 1 பேதுரு : 4 : 13 – 16**

சகோதர சனோதரிகளே! கிறிஸ்துவின் துன்பங்களில் நீங்கள் இத்துணை பங்கு கொள்கிறீர்கள் என எண்ணி மகிழுங்கள். அப்பொழுது கிறிஸ்துவின் மாட்சி வெளிப்படும் வேளையில் இன்னும் மகிழ்ந்து பேருவகை கொள்வீர்கள். கிறிஸ்துவின்பொருட்டுப் பிறர் உங்கள்மீது வசை கூறும்போது நீங்கள் பேறுபெற்றவர்கள். ஏனெனில், கடவுளின் மாட்சிமிக்க தூய ஆவி உங்கள் மேல் தங்கும். ஆனால், உங்களுக்கு வரும் துன்பங்கள், நீங்கள் கொலைஞராகவோ, திருடராகவோ, தீமை செய்பவராகவோ, பிறர் காரியங்களில் தலையிடுபவராகவோ இருப்பதால் வந்தவையாய் இருக்கக்கூடாது. மாறாக, நீங்கள் கிறிஸ்தவராய் இருப்பதால் துன்புற்றால், அதற்காக வெட்கப்படலாகாது. அந்தப் பெயரின் பொருட்டுக் கடவுளைப் போற்றிப் புகழுங்கள்.

**நற்செய்தி : யோவான் 17 : 1 – 11**

அக்காலத்தில் இயேசு சீடர்களோடு பேசியபின் வானத்தை அண்ணாந்து பார்த்து வேண்டியது. ”தந்தையே, நேரம் வந்து விட்டது. உம் மகன் உம்மை மாட்சிப்படுத்துமாறு நீர் மகனை மாட்சிப்படுத்தும். ஏனெனில், நீர் அவரிடம் ஒப்படைத்தவர்கள் அனைவருக்கும் அவர் நிலைவாழ்வை அருளுமாறு மனிதர் அனைவர்மீதும் அவருக்கு அதிகாரம் அளித்துள்ளீர். உண்மையான ஒரே கடவுளாகிய உம்மையும் நீர் அனுப்பிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நிலைவாழ்வு. நான் செய்யுமாறு நீர் என்னிடம் ஒப்படைத்திருந்த வேலையைச் செய்து முடித்து நான் உம்மை உலகில் மாட்சிப்படுத்தினேன். தந்தையே, உலகம் தோன்றும் முன்பே நீர் என்னை மாட்சிப்படுத்தியுள்ளீர். இப்போது உம் திருமுன் அதே மாட்சியை எனக்குத் தந்தருளும். நீர் இவ்வுலகிலிருந்து தேர்ந்தெடுத்து என்னிடம் ஒப்படைத்த மக்களுக்கு நான் உமது பெயரை வெளிப்படுத்தினேன். உமக்கு உரியவர்களாய் இருந்த அவர்களை நீர் என்னிடம் ஒப்படைத்தீர். அவர்களும் உம் வார்த்தைகளைக் கடைப்பிடித்தார்கள். நீர் எனக்குத் தந்தவை அனைத்தும் உம்மிடமிருந்தே வந்தவை என்பது இப்போது அவர்களுக்குத் தெரியும். ஏனெனில் நீர் என்னிடம் சொன்ன வற்றையே நான் அவர்களிடமும் சொன்னேன். அவர்களும் அதை ஏற்றுக்கொண்டு நான் உம்மிடமிருந்து வந்தேன் என்பதை உண்மையில் அறிந்துகொண்டார்கள். நீரே என்னை அனுப்பினீர் என்பதையும் நம்பினார்கள். அவர்களுக்காக நான் வேண்டுகிறேன். உலகிற்காக அல்ல, மாறாக நீர் என்னிடம் ஒப்படைத்தவர் களுக்காகவே வேண்டுகிறேன். அவர்கள் உமக்கு உரியவர்கள். ”என்னுடையதெல்லாம் உம்முடையதே. உம்முடை யதும் என்னுடையதே. அவர்கள் வழியாய் நான் மாட்சி பெற்றிருக்கிறேன். இனி நான் உலகில் இருக்கப்போவதில்லை. அவர்கள் உலகில் இருப்பார்கள். நான் உம்மிடம் வருகிறேன். தூய தந்தையே! நாம் ஒன்றாய் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருக்கும்படி நீர் எனக்கு அளித்த உம் பெயரின் ஆற்றலால் அவர்களைக் காத்தருளும்“ என்றார்.

**தியானம் :** இன்றைய நாளில் இயேசுவின் விண்ணேற்பு விழாவை நினைவுகூரும் எம்மை, விண்ணேற்படைந்த இயேசு ஆசீர்வதித்து தமது இறக்கைகளின் அடியில் வைத்துப் பாதுகாக்கவேண்டுமென மன்றாடுவோம். இயேசுவின் விண்ணேற்பு எமக்கெல்லாம் ஒரு முன்மாதிரியாகத் தரப்பட்டுள்ளது. தமது திருமகன் இயேசுவைப் போலவே நாமும் விண்ணேற்படைந்து, கடவுளின் முன்னிலையில் விண்ணகத்தில் அமரவேண்டும் என்பதே எம்மைத் தமது சாயலாகப் படைத்த இறைவனின் திருவுளமாதலால், வழிப்போக்கரான நாம் மாயை மிகுந்த இவ்வுலக இன்பங்களில் காலத்தைக் கடத்தாமல், விண்ணகம் நோக்கி நமது கண்களையும், இதயத்தையும் எழுப்பவேண்டிய கருமங்களில் சிரத்தை எடுப்போம். இயேசு தமது விண்ணேற்பின் முன்னர் மீன்பிடிப்பவர்களையும், வரி தண்டுவோரையும் சமூகத்தின் அடிமட்டத்தில் பாவிகளென ஒதுக்கப்பட்டு வாழ்ந்தவர்களையும் “என் பின்னே வாருங்கள்“ எனப்பெயர்சொல்லி அழைத்து வரவிருக்கும் விண்ணரசைக் குறித்துப் போதிக்கும் அதிகாரத்தையும் வழங்கினார். இதனையே திருத்தந்தை பிரான்சிஸ் தமது 25-02-2014 திகதிய ருவிட்டர் செய்தியில் “திருமுழுக்குப் பெற்ற நாம் அனைவரும் மறைபோதகத் திருத்தூதர்கள், நாம் உலகில் வாழும் நற்செய்திகளாக மாறுவதற்கு அழைக்கப்பட்டுள்ளோம்“ என்கின்றார். ஆண்டவர் இயேசுவின் பெயரால் திருமுழுக்குப் பெற்றுள்ளவர்கள் செய்யும் தொழிலின் அடிப்படையில் சாதியம் மற்றும் பொருளாதார ரீதியில் சமூக அந்தஸ்து, பட்டம், பதவி வேறுபாடுமின்றி ஆண்டவர் இயேசுவின் சீடராவதால் ஆண்டவர் இயேசுவின் பெயரால் நற்செய்தி அறிவிக்கும் ஒவ்வொருவரையும் எவ்வித வேறுபாடுமின்றி நாம் வரவேற்று ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்போதே விண்ணேற்படைந்த ஆண்டவர் இயேசுவின் நற்செய்தி நம்மிலே உயிர் வாழ்வது மட்டுமல்ல நாமும் எமது விண்ணேற்றத்திற்கு ஏதுவான நிலையில் இவ்வுலகில் வாழ முடியும். இதுவே “உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்“ என்று கூறி விண்ணேற்படைந்த ஆண்டவர் இயேசு இன்றைய நாளுக்கென நமக்குத் தரும் செய்தியாகும்.